# திருக்குறள்– பாரதியார் பாடல்களில் வாழ்வியல் சிந்தனைகள் ஒப்பீடு

***முனைவர் வ. ஹரிஹரன்***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி
மேலநீலிதநல்லூர், சங்கரன்கோவில்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958687

### *முன்னுரை*

தெய்வப்புலவர் திருவள்ளுவர் எழுதிய உலகப் பொதுமறையாம் திருக்குறளின் ஒவ்வொரு சொல்லும் வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துச் சொல்லும் வில்லும் அம்புமாகத் திகழ்கிறது என்பது உலகறிந்த உண்மை. மகாகவி பாரதியார் தன்னுடைய பாடல்களோடு குறள் நெறியைப் பின்பற்றி எடுத்துரைக்கும் வாழ்வியல் சிந்தனைகளை ஒப்பிட்டு இந்தக் கட்டுரையில் காணலாம்.

### மனித வாழ்வியல்

நீதி இலக்கியங்களில் தலையாய ஒன்றான திருக்குறள் மனித வாழ்வுக்குத் தேவையான நன்னெறிகளை எடுத்துச் சொல்கிறது. திருக்குறளைப்பற்றி நாமக்கல் கவிஞர் பின்வருமாறு போற்றிப் பரவுவார்

**“காடு சென்று குகையடைந்து**
**கண்கள் மூடி எண்ணியும்**
**காவி கட்டி ஓடு எடுத்து கஷ்ட**
**வாழ்க்கை பண்ணியும்**
**தாடி வைத்து மொட்டை தட்டித்**
**தவசி என்ற பெயருடன்**
**தரணி மெட்ச ஊர்கள்சுற்றித்**
**தருமபோதம் கூறியும்**
**கூடுவிட்டுக் கூடுபாயும்**
**சித்து செய்யக்கோரியும்**
**கோடி காலம் வாழ எண்ணிக்**
**காயகல்பம் தேடியும்**
**தேடுகின்ற உண்மையாவும்**
**ஓடி வந்து நிற்குமே**
**தெய்வவாக்கு வள்ளுவன்**
**திருக்குறள் கற்கவே”**

நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளை எழுதிய இந்தப் பாடலில் வாழ்வில் மெய்யறிவைப் பெறுவதற்குத் துறவறம் தேவையில்லை திருக்குறளைக் கற்றால் போதும் என்று எடுத்துரைக்கிறார்.

**'அரிதுஅரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது'** என்ற ஔவையாரின் வாக்கிற்கிணங்க மனித வாழ்க்கை சிறப்புக்குரியதாகும்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள்: 50)**

என்பது வள்ளுவரின் சிந்தனையாகும்.

"உயர்ந்த ஞானத்தைச் சிறந்த முறையில் கூறும் திருக்குறள் போன்ற அறநெறிக் கோவை உலக இலக்கியங்களில் வேறு இல்லை"[2] என்று அறிஞர் சர்.ஆல்பர்ட் சுவைட்சர் தான் எழுதிய 'இந்திய நாட்டின் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்

### பாரதியார் பரவும் திருக்குறள்

பக்திக்கவி, மக்கள் கவி, தேசியகவி என்று எப்படி எல்லாமோ போற்றினாலும் மகாகவி என்ற பெயர் பாரதியாருக்கு மட்டுமே உலகில் வழங்கப்பட்ட ஒன்றாகும். தம் வாழ்வின் மூத்தோரின் சிந்தனைகளை வந்தனை கூறி வழிபடுபவர் பாரதியார்.

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

என்பது பாரதியாரின் வாக்கு.

**"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
**வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை**
**உண்மை வெறும்புகழ்ச்சியில்லை"**

என்றும் பாடியுள்ளார்.

**பாவேந்தர் பாரதிதாசன் தனக்கே உரிய பாணியில் திருக்குறளைப் பற்றிப் பின்வருமாறு போற்றுவார்**

**"தெள்ளு தமிழ் நடை; சின்னஞ்சிறு**
**இரண்டடிகள்**
**அள்ளுதொறுஞ் சுவை; உள்ளுந்தொறும்**
**உணர்**
**வாகும் வண்ணம் கொள்ளும், அறம்**
**பொருள்**
**இன்பம் அனைத்தும் கொடுத்த திருக்குறள்"**

திருக்குறளில் உறுதி, தெளிவு, பொருள் ஆழம், விரிவு, அழகு போன்றவை பாரதியாருக்குப் பிடித்தமானவை. அவ்வகையில் திருக்குறளின் நெறியில் பாரதியாரின் கவிதைச் சிந்தனைகளையும் காணலாம்.

### கடவுள் வாழ்த்து

திருக்குறளின்கண் 'கடவுள் வாழ்த்து' என்ற அதிகாரம் உண்டு.

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு" (குறள்:1)**

என்பது முதல் குறள். எழுத்துக்கள் எல்லாம் அகரம் ஆகிய முதலை உடையன. அதுபோல உலகம் ஆதிபகவன் ஆகிய முதலை உடைத்து என்ற சிந்தனை புலப்படுகிறது. அதனைப் பின்வரும் குறளில் மேலும் தெளிவு படுத்து கிறார்.

**"கற்றதனால் ஆயபயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்" (குறள்:.2)**

கற்றதனால் ஆன பலன் இறைவனை வணங்குவதால் தான் என்று வலியுறுத்துகிறார்.

பாரதியார் தோத்திரப் பாடல்களில் பல தெய்வங்களைப் பாடியுள்ளார். ஆயினும் எல்லாம் ஒரே தெய்வம் என்பதில் பாரதியாருக்கும் தெளிவு இருந்திருக்கிறது.

**"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி**
**அலையும் அறிவிலிகாள்;- பல்**
**லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம்**
**உண்டாமெனல் கேளீரோ!?"**

என்று வினவுகிறார். 'அறிவு ஒன்றுதான் தெய்வம்" என்று பகர்கிறார்.

தெய்வ நம்பிக்கையில் தியானத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. தியானத்தின் வழி தமது உள்ளத்தில் தீரத்தன்மை அமைதி, பலம், தேஜஸ், சக்தி, அருள், பக்தி, சிரத்தை இந்த எண்ணங்களையே நிரப்ப வேண்டும். 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்பது குறள் இவ்வாறு தியானத்திற்கு உள்ளத்தையும் எண்ணத்தையும் தொடர்புபடுத்திப் பொருத்தமாகப் பாரதியார் கையாண்டுள்ளார்.

**அன்பு பற்றிய குறளும் பாரதியாரும்**

தெய்வப்புலவர் திருவள்ளுவர் 'அன்புடைமை' என்று அதிகாரம் படைத்து அதில்

**"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்**
**என்புதோல் போர்த்த உடம்பு" (குறள்:80)**

என்று பாடிய திருக்குறளையே பாரதியார் பாடலில் பெய்து எழுதியுள்ளார்.

மேலும் ஒரு குறளில்

**"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு" (குறள்:.73)**

என்றும் பாடியுள்ளார். பெறுதற்கு அரிய மக்கள் உயிர்க்கு உடம்போடு உண்டாகிய தொடர்ச்சியினை அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயன் என்று பொருள் கொள்வர்.

**பாரதியார் பாப்பா பாட்டு பாடும் போது**

**"உயிர்களிடத்தில் அன்பு வேணும் தெய்வம் உண்மை என்று தானறிதல் வேணும் வயிர முடைய நெஞ்சு வேணும் இது வாழும் முறைமையடி பாப்பா"[5]**

என்று பாடுகிறார். தெய்வ நம்பிக்கையின் உண்மையைக் கூற வரும் பாரதியார் அன்பை முதன்மைப்படுத்துவதைக் காண முடிகிறது.

**"மானுடர் உழாவிடினும் வித்து**
**நடாவிடினும்**
**வரம்பு கட்டா விடினும் அன்றி நீர் பாய்ச்ச**
**ாவிடினும்**
**வானுலகு நீர் தருமேல் மண்மீது மரங்கள்**
**வகைவகையா நெற்கள் புற்கள்**
**மலிந்திருக்குமன்றே**
**யானெதற்கும் அஞ்சுகிலேன்; மானுடரே நீவிர்**
**என் மதத்தைக் கைக்கொண்மின் பாடுபடல்**
**வேண்டா**
**ஊனுடலை வருத்தாதீர் உணவு இயற்கை**
**கொடுக்கும்**
**உங்களுக்குத் தொழில் இங்கே அன்பு**
**செய்தல் கண்டீர்!"[6]**

என்று பாடியுள்ளார்

அகத்தூய்மை பற்றிப் பாட வந்த வள்ளுவர்

**"புறந் தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்" (குறள்:.298)**

என்று சொல்வார்.

பாரதியார் தம் சுய சரிதையில் "அகத்திலே அன்பினோர் வெள்ளம்" என்று குறிப்பிடுவதை ஈண்டு ஒப்பு நோக்கலாம்.

**தீய குணங்களின் தாய்**

தீய குணங்கள் அனைத்திற்கும் தாயாக விளங்குவது அழுக்காறு என்பது. வள்ளுவர் 'அழுக்காறாமை' என்று ஒரு தனி அதிகாரமே வகுத்துள்ளார். 'பொறாமை' என்பது ஒரு மனிதனை அழிக்கும் நோய் எனலாம்.

பாஞ்சாலி சபதம் எழுதிய பாரதியார் துரியோதனனின் பொறாமைக் குணங்களை எடுத்துக் கூறுவார். அதுவே அவனுடைய அழிவுக்குக் காரணமாகி விட்டது.

பொறாமை எழுச்சி பெறும் போது உருவாகும் தீய குணங்களில் சினமும் ஒன்று.

**"தன்னைத்தான் காக்கின் சினம் காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்" (குறள்:305)**

என்பது குறள் சிந்தனை ஆகும். சினம் எனும் தீய குணம் கொண்டவனையும் கொல்லும்; அதற்கு இனமாகிய துணையையும் எரிக்கும் என்பது பொருள்.

பாரதியார் தம் பாடலில்,

**"சினம் கொள்வார் தம்மைத் தாமே தீயார் சுட்டுச்செத்திடுவர் ஒப்பாவார்; சினம் கொள்வார் தாம்**
**மனங்கொண்டு தங்கழுத்தைத் தாமே செய்ய**
**வாள்கொண்டு கிழித்திடுவார் மானு வராம்"**

என்று சினம் கொண்டவர்கள் செயல்களை எடுத்துக்காட்டியுள்ளார்.

**"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு"(குறள்:.595 )**

என்று குரல் வரிகளை

**"எண்ணுவது உயர்வு**
**உள்ளத் தனையது உயர்வு"**

என்ற பாரதியாரின் ஆத்திச்சூடி வரிகளுடன் ஒப்பு நோக்கலாம்.

'எண்ணித் துணிக கருமம்' என்ற குறள் வரியை "செய்வது துணிந்து செய்" என்ற பாரதியார் வரியில் காணலாம்.

**'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்'**

என்ற குறள் சிந்தனை பாரதியாரின் "ஐம்பொறி ஆட்சி கொள்" என்ற வார்த்தைகளில் பயின்று வரக் காணலாம்.

"உலக இலக்கிய வரிசையில் முதலிடம் பெறும் நீதி இலக்கியம் திருக்குறள். உலகக் கவிஞர்கள் வரிசையில் முதலிடம் பெறுபவர் மகாகவி. முந்தையரின் சிந்தனைகளை பாரதியார் வந்தனை செய்து தம் படைப்புகளில் வலியுறுத்தியுள்ளார்."[7] என்று இரா. பால சுப்பிரமணியன் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## தொகுப்புரை

திருக்குறள் என்பதன் உறுதியும் தெளிவும் பொருளின் ஆழமும் விரிவும் அழகும் பாரதியார் நெஞ்சில்குடிபுகுந்துவிட்டனஎன்பதைஅவர்தம் பாடல் வரிகள் தெளிவு படுத்துகின்றன.

குறளில் இடம்பெறும் கடவுள் வாழ்த்து வள்ளுவரின் தெய்வ நம்பிக்கையைக் காட்டுகிறது. பாரதியாரிடம் பல்சமயத் தெய்வங்களையும் ஒன்றாக்கி பாடும் வல்லமையைக் காணலாம். அன்பை முதன்மைப்படுத்தித் தெய்வ நம்பிக்கையை எடுத்துரைக்கிறார் பாரதியார். 'பிறப்பொக்கும்' என்று நிலையில் 'வேதிய ராயினும் ஒன்றே அன்றி வேறு குலத்தின ராயினும் ஒன்றே' என்று பாரதியாரைக் கூற வைத்தது. பாரதியார் பாடல்களில் பல வரிகள் திருக்குறள் வரிகளை நினைக்கத் தூண்டுவன. அதன் விளைவே இக்கட்டுரை.

## சான்றெண் குறிப்புகள்

1. இராமலிங்கனார் நாமக்கல் இராமலிங்கம் பாடல்கள், ப.72
2. இரா. பாலசுப்பிரமணியன், சிந்தனைச்சு டர்கள் ப. 32.
3. பாரதியார், மகாகவி பாரதியார் கவிதைகள், ப. 42
4. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப. 246
5. பாரதியார், மகாகவி பாரதியார் கவிதைகள், ப.175
6. மேலது ப.167
7. இரா. பாலசுப்பிரமணியன், சிந்தனைச் சுடர்கள், ப..42

## துணை நின்ற நூல்கள்

1. இராமலிங்கம், வெ., இராமலிங்கம் பாடல்கள், தொகுதி 1,சீதை பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5
2. பாரதியார் கவிதைகள் பழநியப்பா பிரதர்ஸ், சென்னை-14
3. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை
4. பாலசுப்பிரமணியன்,இரா. சிந்தனைச் சுடர்கள், தமிழ் சக்தி பதிப்பகம், காரைக் குடி.-2